Q.C-080

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| Name of the Test: | Departmental Test in the Tamil Nadu Services Manual Volume-I for the Staff of the Tamil Nadu Public Service Commission (Without Books) | 009 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour

Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. Definitions' are detailed under which section of the Tamil Nadu Govt. Servants (Conditions of Service) Act, 2016 ?
தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-இல் "வரையறைகள்" எப்பிரிவில் உள்ளன?

(A) Section 3
பிரிவு 3

(B) Section 2
பிரிவு 2

(C) Section 4
பிரிவு 4

(D) Section 5
பிரிவு 5

2. What is the percentage of the candidates of each reservation group including General Turn in the reserve list?
காத்திருப்பு பட்டியலில் பொதுப் பிரிவு உட்பட ஒவ்வொரு இன ஒதுக்கீட்டிற்கும் எத்தனை சதவீதத்திற்கு குறையாமல் ஒதுக்கீடு செய்யப்படும்?

(A) 10%

(B) 20%

(C) 25%

(D) 5%

3. Validity of the list of approved candidates mentioned in ————— of the Tamil Nadu Govt. Servants (Conditions of Service) Act, 2016.
ஒப்புதல் அளிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் பட்டியலுக்கான செல்லுந்தன்மையின் கால அளவு குறித்து தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-இல் எப்பிரிவில் குறிப்பிடப்பட்டு உள்ளது?

(A) Explanation-I under section 7(1)
பிரிவு 7(1) இல் விளக்கம் - I

(B) Explanation -II under section 7(1)
பிரிவு 7(1) இல் விளக்கம் - II

(C) Section 6
பிரிவு 6

(D) First proviso to section 7(1)
பிரிவு 7(1) இன் முதல் காப்புரை

4. If a Govt. servant who is working in outside the regular line beyond 5 years shall not be considered for promotion even though he is otherwise qualified mentioned in ————— of the Tamil Nadu Govt. Servants (conditions of service) Act, 2016.
தம்முடைய முறையான பணிக்கு வெளியேயுள்ள மற்றொரு பணிக்கு அமர்த்தப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து அப்பணியில் இருக்கும் ஓர் அரசு ஊழியர் தம்முடைய முறையான பணிக்கான பதவி உயர்விற்கு தகுதியுடையவராக இருப்பினும் அவர் பரிசீலிக்கப்படமாட்டார் என்ற விளக்கம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016ல் எப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Section 11
பிரிவு 11இல்

(B) Section 13
பிரிவு 13

(C) Section 14
பிரிவு 14

(D) Proviso to Section 12
பிரிவு 12 இன் காப்புரை

5. Section 14 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 Speaks about
தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016ல் பிரிவு 14இல் கூறப்படுவது

(A) Temporary appointment
தற்காலிக பணி நியமனம்

(B) Service Right in former service
முந்தைய பணியிலுள்ள பணியுரிமை

(C) Method of Recruitment
நியமன முறை

(D) Application fee for recruitment
விண்ணப்பக் கட்டணம்

6. What is the maximum age limit for appointment on Compassionate ground?
கருணை அடிப்படையிலான பணிநியமனங்களுக்கு உச்ச வயது வரம்பு யாது

(A) 30 years
30 ஆண்டுகள்

(B) 35 years
35 ஆண்டுகள்

(C) 21 years
21 ஆண்டுகள்

(D) 18 years
18 ஆண்டுகள்

7. Temporary appointments are made under what section of Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016?
தற்காலிக நியமனங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016ல் எப்பிரிவின் கீழ் மேற்கொள்ளலாம்?

(A) Section 18
பிரிவு 18

(B) Section 17
பிரிவு 17

(C) Section 19
பிரிவு 19

(D) Section 14
பிரிவு 14

8. A person shall be appointed by agreement invoking ———— of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016.
ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் (பணிநிபந்தனை) பணிநியமனம் எப்பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது?

(A) Section 17
பிரிவு 17

(B) Section 18
பிரிவு 18

(C) Section 14
பிரிவு 14

(D) Section 19
பிரிவு 19

9. The minimum General Educational Qualification Specified in ——————of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016.
தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016ல் குறைந்தபட்ச கல்வித் தகுதி குறித்து எப்பிரிவில் குறிபிடப்பட்டுள்ளது?

(A) Schedule III under Section 20 (1)
பிரிவு 20(1)இல் இணைப்புப் பட்டியல் III

(B) Schedule III under Section 18 (1)
பிரிவு 18(1)இல் இணைப்புப் பட்டியல் III

(C) Schedule I under Section 18 (1)
பிரிவு 18(1)இல் இணைப்புப் பட்டியல் I

(D) Schedule II
இணைப்புப் பட்டியல் II

10. Section 20 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 specifies
தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 20-இல் குறிப்பிடப்படுவது

(A) Language test
மொழித்தேர்வு

(B) Qualifications
தகுதிகள்

(C) Maximum age limit for appointment
பணிநியமனத்திற்கான அதிகபட்ச வயது வரம்பு

(D) Recruitment
பணியமர்த்தம் (ஆள் எடுக்கும் முறை)

11. Minimum Age limit for Direct Recruitment is
நேரடி நியமனத்திற்கான குறைந்தபட்ச வயது

(A) 20 years
20 ஆண்டுகள்

(B) 18 years
18 ஆண்டுகள்

(C) 30 years
30 ஆண்டுகள்

(D) 21 years
21 ஆண்டுகள்

12. Language test in Tamil referred to in sub section (1) of section 22 of the Act,2016 conducted by
தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 22(1) இன்படி தமிழ்மொழி தேர்வு யாரால் நடத்தப்படுகிறது?

(A) Tamil Nadu Public Service Commission
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணையம்

(B) Teachers Recruitment Board
ஆசிரியர் தேர்வு வாரியம்

(C) Government
அரசு

(D) Appointing Authority
நியமன அதிகாரி

13. If a candidate for recruitment possessing a degree should be in accordance with ———— of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016.
பணிநியமனம் பெறுவதற்கு விண்ணப்பதாரர் பெற்றிருக்கும் சட்டம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-இல் எவ்விதிக்கு உகந்ததாக இருக்க வேண்டும்.

(A) Explanation I under section 25
பிரிவு 25, விளக்கம் (I)

(B) Explanation II under section 25
பிரிவு 25, விளக்கம் (II)

(C) Explanation III under section 25
பிரிவு 25, விளக்கம் (III)

(D) Explanation under section 26
பிரிவு 26, விளக்கம்

14. Tamilnadu Government Servants (Conditions of services) Section 26 of the Act, 2016 speaks
I. Reservation of appointment
II. Appointment of Women
தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-இல் பிரிவு 26-இல் குறிப்பிடப்படுவது

I பணிநியமனத்திற்கான இட ஒதுக்கீடு

II பெண்களுக்கு பணிநியமனம்

(A) I only correct
I மட்டும் சரி

(B) II only correct
II மட்டும் சரி

(C) I and II are correct
I மற்றும் II சரி

(D) I and II are not correct
I மற்றும் II தவறு

15. Rule of reservation shall not apply to the appointments on Compassionate grounds by invoking which section of the Act, 2016?
தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-இல் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கு இட ஒதுக்கீடு விதி பொருந்தாது என எப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Section 27(h)
பிரிவு 27(h)

(B) Section 27(g)
பிரிவு 27(g)

(C) Section 27(c)
பிரிவு 27(c)

(D) Section 27(f)
பிரிவு 27(f)

16. A minimum of ———— percent of all vacancies which are to be filled through Direct Recruitment is reserved for Women candidates?
நேரடி நியமனங்களில் குறைந்தபட்சம் பெண்கள் எத்தனை விழுக்காடு நியமனம் செய்யப்படலாம்?

(A) 15

(B) 20

(C) 30

(D) 10

17. I. Application of revision of seniority of a person shall be submitted to the appointing authority within a period of 3 years

II. The above said time limit shall also be applicable to cases of rectifying orders resulting from mistake of facts

I. முதுநிலையினை திருத்தக் கோரும் விண்ணப்பம் 3 ஆண்டுகளுக்குள் நியமன அலுவலரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

II. மேற்குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறை தவறாக வெளியிடப்பட்ட ஆணையினை திருத்தியமைக்க கோருவதற்கும் பொருந்தும்.

(A) I and II are correct
I மற்றும் II சரி

(B) II only correct
II மட்டும் சரி

(C) I only correct
I மட்டும் சரி

(D) I and II are not correct
I மற்றும் II இரண்டும் தவறு

18. Temporary promotion can be effected invoking ———— of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016.
தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-இல் எப்பிரிவின் கீழ் தற்காலிக பதவியுயர்வு வழங்கலாம்?

(A) Section 47(3)
பிரிவு 47(3)

(B) Section 47(1)
பிரிவு 47(1)

(C) Section 41(1)
பிரிவு 41(1)

(D) Section 44
பிரிவு 44

19. Conditions for accepting the resignation of a Government Servants specified in ———— of the Tamil Nadu Government Servants (Conditions of Servants) Act, 2016
பணித்துறப்பினை அனுமதிப்பதற்கான வரையறைகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-இல் எப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன?

(A) Section 49
பிரிவு 49

(B) Section 50(1)
பிரிவு 50(1)

(C) Section 50(2)
பிரிவு 50(2)

(D) Section 50(4)
பிரிவு 50(4)

20. What section in the Tamil Nadu Governments Servants (Conditions of Servants) Act, 2016 speaks about relinquishment of rights by member of a service?
உறுப்பினர்களால் உரிமைகளை துறத்தல் குறித்து தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016இல் எப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Section 50
பிரிவு 50

(B) Section 57
பிரிவு 57

(C) Section 58
பிரிவு 58

(D) Section 51
பிரிவு 51

21. A member of service who can apply for alteration of date of birth in accordance with the provision of ————of the Tamil Nadu Government Servants(Conditions of Servants) Act, 2016.
தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-இல் எப்பிரிவின் கீழ் பணியின் ஓர் உறுப்பினர் பிறந்த தேதியை மாற்றக் கோரலாம்?

(A) Section 58
பிரிவு 58

(B) Section 60
பிரிவு 60

(C) Section 59
பிரிவு 59

(D) Section 61
பிரிவு 61

22. Overriding effect of Special rules mentioned in ——————of the Tamil NaduGovernment Servants (Conditions of Servants) Act, 2016.
தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-இன் பிரிவுகள் மீதான சிறப்பு விதிகளின் செல்லுந்தன்மை சட்டத்தின் எப்பிரிவில் கூறப்பட்டுள்ளது.

(A) Section 17
பிரிவு 17

(B) Section 68
பிரிவு 68

(C) Section 69
பிரிவு 69

(D) Section 70
பிரிவு 70

23. I. Tribunal for disciplinary proceedings enquiry is bar for promotion / appointments

II. Detailed enquiry is pending by the appropriate investigating authority and no specific charges are framed is not a bar for promotion.

I. ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாய விசாரணை பதவி உயர்வு/பணி நியமனத்திற்கு தடையாகும்.

II. முறையான விசாரணை அமைப்பின் கீழ் விரிவான விசாரணை நிலுவையிலிருந்து ஆனால், குற்றசாட்டுகள் மேற்கொள்ளப்படாமல் இருந்தால், பதவி உயர்விற்கு தடையாக அமையாது.

(A) II only correct
II மட்டும் சரி

(B) I only correct
I மட்டும் சரி

(C) I and II are correct
I மற்றும் II சரி

(D) I and II are not correct
I மற்றும் II தவறு

24. I. Charges framed under 17 (a) of the TNCS (D&A) rules against a member of a service shall be a bar for inclusion in the approved list

II. Also charges under 17 (b) is a bar

I. தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேற்முறையீடு) விதிகளில் விதி 17(ஏ)) இன் கீழ் ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுக் குறிப்பாணை தகுதியான பட்டியலில் ஒருவரை சேர்ப்பதற்கு தடையாக அமையும்.

II. 17(பி) கீழ் ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுக் குறிப்பாணைக்கும் மேற்காண் நிலை பொருந்தும்.

(A) I is not correct
I தவறு

(B) II is not correct
II தவறு

(C) I and II are correct
I மற்றுமு II சரி

(D) I and II are not correct
I மற்றும் II தவறு

25. Consideration of a member for inclusion in the approved list are detailed in ———— of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016.
ஒப்புதல் பட்டியல்களில் உறுப்பினர்களை சேர்ப்பதற்கு கருதிப் பார்க்கவேண்டிய விவரங்கள் குறித்து சட்டம் 2016-இல் எங்கு கூறப்பட்டுள்ளது?

(A) Schedule X
இணைப்புப் பட்டியல் X

(B) Schedule XI
இணைப்புப் பட்டியல் XI

(C) Schedule IX
இணைப்புப் பட்டியல் IX

(D) Schedule VIII
இணைப்புப் பட்டியல் VIII

26. Temporary relinquishment shall be accepted if it is made for a period of
தற்காலிகமாக பதவியுயர்வு உரிமைத் துறப்பினை ஏற்பதற்கு உரிய கால அளவு ———— ஆகும்.

(A) 2 years
2 ஆண்டுகள்

(B) 4 years
4 ஆண்டுகள்

(C) 1 year
ஓராண்டு

(D) 3 years
3 ஆண்டுகள்

27. The appointing authority shall also take into account the provisions of following sections of the Act, 2016 while preparing approved list for promotion
பதவி உயர்விற்கான தகுதி வாய்ந்தோர் பெயர்ப்பட்டியல் நியமன அலுவலரால் தயாரிக்கப்படும்போது கீழ்க்கண்ட எப்பிரிவுகளை கருத்தில் கொள்ள வேண்டும்

(A) Section 12
பிரிவு 12

(B) Section 42
பிரிவு 42

(C) Section 12 and 42
பிரிவுகள் 12 மற்றும் 42

(D) Section 11 and 12
பிரிவுகள் 11 மற்றும் 12

28. Which Article of the Constitution of India enables the Governor to make rules regulating the recruitment in connection with the affairs of the State?
இந்திய அரசியலமைப்பின் எந்த சட்டக்கூறு ஆளுநருக்கு மாநிலங்கள் சம்பந்தமான பணியமர்த்துதல் குறித்த விதிகளை உருவாக்க வழிவகை செய்கின்றது?

(A) Article 310
சட்டக்கூறு 310

(B) Article 309
சட்டக்கூறு 309

(C) Article 311
சட்டக்கூறு 311

(D) Article 320
சட்டக்கூறு 320

29. ———————— Of the Constitution says that a member of a service holds any Civil post under a State during the pleasure of the Governor of the State.
மாநிலத்தின் ஏதாவதொரு பணியின் ஓர் உறுப்பினர் ஆளுநரின் நன்மதிப்பு (pleasure) இருக்கும் வரைதான் அப்பணியில் தொடரமுடியும் என்பது அரசியலமைப்பு சட்டத்தில் ———————— இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

(A) Article 310
சட்டக்கூறு 310

(B) Article 311 (1)
சட்டக்கூறு 311(1)

(C) Article 323
சட்டக்கூறு 323

(D) Article 311 (2)
சட்டக்கூறு 311(2)

30. The authority empowered to "Dismissal from Service" Speaks in ———————— of the Constitution.
பணியறவு செய்யும் அதிகாரம் உடையவர் யார் என்று அரசியலமைப்பு சட்டத்தில் எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Article 310
சட்டக்கூறு 310

(B) Article 320
சட்டக்கூறு 320

(C) Article 311(1)
சட்டக்கூறு 311(1)

(D) Article 311(2)
சட்டக்கூறு 311(2)

31. ———————— is not applicable where a person is dismissed on the ground of conduct which has led to his conviction on a Criminal charge.
ஒருவர் குற்ற வழக்கில் நடத்தை காரணமாக குற்றவாளியானதால் அவர் பணியறவு செய்யப்படும்போது கீழ்க்கண்டவற்றுள் எந்த சட்டக்கூறு பொருந்தாது?

(A) Article 311(1)
சட்டக்கூறு 311(1)

(B) Article 311(2)
சட்டக்கூறு 311(2)

(C) Article 310
சட்டக்கூறு 310

(D) Article 309
சட்டக்கூறு 309

32. In accordance with ————————Consultation of the Commission is necessary while disposing a petition relating to disciplinary matters
ஒழுங்கு நடவடிக்கை பொருண்மை குறித்த மனுக்களை தீர்வு செய்யும்பொழுது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்து பெறப்பட வேண்டும் என்று எதில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Article 311
சட்டக்கூறு 311

(B) Article 309
சட்டக்கூறு 309

(C) Article 310
சட்டக்கூறு 310

(D) Article 320(3)(c)
சட்டக்கூறு 320(3) (c)

33. How many rules are prescribed/framed in the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules?
தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் எத்தனை விதிகள் உள்ளன?

(A) 37 (B) 35
(C) 30 (D) 36

34. Penalties are provided under which rule / rules of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) rules?
தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி ————————ல் தண்டனைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

(A) 8
8
(B) 8 and 9
8 மற்றும் 9
(C) 8 and 10
8 மற்றும் 10
(D) 9
9

35. How many major penalties are prescribed in the Tamil Nadu Civil Services (D&A) rules?
தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் பெருந்தண்டனைகளின் எண்ணிக்கை

(A) 3 (B) 5
(C) 4 (D) 6

36. The penalty of fine shall be imposed only on a
I. Member of the Tamil Nadu Basic Service
II. Office Assistant
அபராதம் என்ற தண்டனை யாருக்கு வழங்கலாம்

I. தமிழ்நாடு அடிப்படை பணியின் உறுப்பினர்

II. அலுவலக உதவியாளர்

(A) I and II are correct
I மற்றும் II சரி
(B) I only correct
I மட்டும் சரி
(C) II only correct
II மட்டும் சரி
(D) I and II are not correct
I மற்றும் II தவறு

37. The ____________ of a person from the service shall not disqualify him for future employment.
கீழ்க்கண்டவற்றுள் எந்த தண்டனை பெறுபவர் வருங்காலத்தில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு தகுதியற்றவராக கருதப்படமாட்டார்.

(A) dismissal
பணியறவு

(B) removal
பணிநீக்கம்

(C) compulsory retirement
கட்டாய ஓய்வு

(D) both dismissal and removal
பணியறவு (ம) பணிநீக்கம்

38. Which rule in the Tamil Nadu Civil Services (D & A) Rules prescribes the authority competent to initiate disciplinary proceedings against in a case where more than one Govt. servants on the same dept. are involved.
ஒரே துறையில் பணிபுரியும் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள தகுதிவாய்ந்த அலுவலர் யார் என்பது குறித்து தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் எவ்விதியில் கூறப்பட்டுள்ளது.

(A) 17A

(B) 9(a)

(C) 9A

(D) 20

39. If the charges are framed under 17(a) of the Tamil Nadu Civil Service (D&A) Rules any one of the following penalties may be imposed
I. Censure
II. Suspension
தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(a) யின் கீழ் மேற்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு கீழ்கண்ட தண்டனைகளை வழங்கலாம்.
I. கண்டனம்
II. தற்காலிக பணிநீக்கம்

(A) I and II are correct
I மற்றும் II இரண்டும் சரி

(B) I only correct
I மட்டும் சரி

(C) II only correct
II மட்டும் சரி

(D) I and II are not correct
I மற்றும் II இரண்டும் தவறு

40. If a member of a service convicted in a criminal court, the procedure prescribed in ________ of the Tamil Nadu Civil Service (Discipline and Appeal) Rules shall be considered.
குற்ற வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட உறுப்பினர் மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் ———— விதியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றலாம்.

(A) 17(b)
(B) 17(c)(i)
(C) 17(e)
(D) 17(a)

41. A member of a service who is detained in custody for a period longer than ———— shall be deemed to have been suspended under Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules
குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் படி அரசு ஊழியர் ———— மேல் காவலில் வைக்கப்பட்டால் அவர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டவராக கருதப்படுவார்.

(A) 24 hours
24 மணி நேரம்
(B) 12 hours
12 மணி நேரம்
(C) 48 hours
48 மணி நேரம்
(D) 36 hours
36 மணி நேரம்

42. I. A person who has ceased to be in Govt. service shall be entitled for appeal
II. Any of the penalty imposed on a Govt. servant entitle for appeal
I. ஒருவர் அரசுப் பணியிலிருந்து நிறுத்தப்பட்டிருப்பினும் அவர் மேல்முறையீடு செய்வதற்கு தகுதி உடையவர் ஆவார்.
II. ஓர் அரசு ஊழியர் எத்தண்டனை பெற்றிருப்பினும் மேல்முறையீடு செய்ய தகுதியுடையவர் ஆவார்.

(A) I and II are correct
I மற்றும் II சரி
(B) I only correct
I மட்டும் சரி
(C) II only correct
II மட்டும் சரி
(D) I and II are not correct
I மற்றும் II தவறு

43. Grounds for review by the Govt. prescribed in rule ———— of the Tamil Nadu Civil Services (D&A) Rules.
தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி ———— அரசு மறு ஆய்வு செய்வதற்கான காரணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

(A) 20(1)
(B) 20(2)
(C) 19
(D) 20(3)

44. The appellate authority may
    I. Confirming the penalty
    II. Enhancing the penalty
மேல் முறையீட்டு அதிகாரி தண்டனையை
    II. உறுதி செய்யலாம்
    II. அதிகமாக்கலாம்

(A) I only correct
I மட்டும் சரி

(B) II only correct
II மட்டும் சரி

(C) I and II are correct
I மற்றும் II சரி

(D) I and II are not correct
I மற்றும் II தவறு

45. The rule in the Tamil Nadu Civil Services(Disciplinary Proceedings Tribunal) Rules, 1955 which allow to constitute Tribunals for disciplinary proceedings is
தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம்) விதிகள் 1955 எவ்விதி தீர்ப்பாயங்களை நிறுவுவதற்கு அனுமதிக்கிறது.

(A) 2

(B) 3(1)

(C) 3(2)

(D) 1(c)(i)

46. The Govt. shall be the authority competent to impose a penalty in cases relating to
    I. officers of the state service
    II. officers of the subordinate service
அரசு தண்டனை வழங்கும் அதிகாரியாக கருதப்படுவது
    II. மாநிலப் பணியிலுள்ள அலுவலர்களுக்கு
    II. சார்நிலைப் பணியிலுள்ள அலுவலர்களுக்கு

(A) I and II are correct
I மற்றும் II சரி

(B) I only correct
I மட்டும் சரி

(C) I and II are not correct
I மற்றும் II தவறு

(D) II only correct
II மட்டும் சரி

47. In which Appendix standard form of order to be adopted by the Government for communicating the report of Tribunal for Disciplinary Proceedings to the Head of the Department for taking action
அரசு தீர்ப்பாயத்தின் அறிக்கையை துறைத் தலைமைக்கு அனுப்பும் நேர்வுகளில் பின்பற்ற வேண்டிய படிவம் எதில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Appendix III
பிற்சேர்க்கை III

(B) Appendix IV
பிற்சேர்க்கை IV

(C) Appendix V
பிற்சேர்க்கை V

(D) Appendix VI
பிற்சேர்க்கை VI

48. I. If a government servant convicted in a criminal court the procedures under rule 17(b) of the TNCS need not be followed for imposing major penalties.
II. For that the Tamil Nadu Public Service commission need not be consulted
I. ஒரு அரசு ஊழியர் குற்ற வழக்கில் குற்றவாளியாக தீர்ப்பாணை பெறும்போது அவர் மீது துறை ரீதியிலான பெருந்தண்டனை விதிக்க தமிழ்நாடு குடிமைப் பணி விதி 17(பி) க்கான வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டியதில்லை.
II. மேற்காண் நிலையில் தேர்வாணையத்தின் கருத்து பெறப்பட வேண்டியதில்லை.

(A) I and II are not correct
I மற்றும் II தவறு

(B) I only correct
I மட்டும் சரி

(C) II only correct
II மட்டும் சரி

(D) I and II are correct
I மற்றும் II சரி

49. I. In suspension order speaking order is desirable
II. Opportunity of hearing before suspension is necessary
I. தற்காலிக பணி நீக்க ஆணை அனைத்து விவரங்களையும் கொண்டிருக்க வேண்டும்.
II. தற்காலிக பணிநீக்கம் செய்யப்படுவதற்கு முன் தன்னிலை விளக்கம் கேட்கப்பட வேண்டும்.

(A) I and II are not correct
I மற்றும் II தவறு

(B) I only correct
I மட்டும் சரி

(C) I not correct
I மட்டும் தவறு

(D) both I and II are correct
I மற்றும் II சரி

50. What is the normal time limit for finalizing Departmental disciplinary action in which the government servant has been suspended?
தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட ஒரு அரசு ஊழியர் மீதான துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை முடிக்கப்பட வேண்டிய பொதுவான காலக்கெடு

(A) one year
ஓராண்டு

(B) six months
ஆறு மாதங்கள்

(C) three months
மூன்று மாதங்கள்

(D) two months
இரண்டு மாதங்கள்

51. A person imposed with a punishment of stoppage of increment with cumulative effect cannot be given effect to fully, the monitory value equivalent to__________ times the amount of increments ordered to be withheld shall be recovered
அரசு ஊழியருக்கு வழங்கப்பட்ட ஊதிய உயர்வு நிறுத்தம் திரண்ட பயனுடன் என்ற தண்டனை முழுமையாக நடைமுறைப்படுத்த இயலாத நிகழ்வுகளில் நிறுத்தி வைக்கப்பட்ட ஊதிய உயர்வு எத்தனை மடங்குகளாக பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

(A) Two
இரண்டு

(B) Three
மூன்று

(C) Five
ஐந்து

(D) Four
நான்கு

52. Which one of the following is not the penalty under Tamil Nadu Civil Services (Disciplinary & Appeal) Rules?
தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் கீழ்க்கண்டவற்றுள் எது தண்டனையாக கருதப்படுவதில்லை?

(A) Censure
கண்டனம்

(B) Fine
அபராதம்

(C) Warning
எச்சரிக்கை

(D) Suspension
தற்காலிக பணி நீக்கம்

53. Standard form of order for taking disciplinary action in common proceedings is given in
பொதுவான ஒழுங்கு நடவடிக்கை தொடர்வதற்கு முறையாக படிவம் —————— இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

(A) Appendix VI
பிற்சேர்க்கை VI

(B) Appendix I
பிற்சேர்க்கை I

(C) Appendix V
பிற்சேர்க்கை V

(D) Appendix X
பிற்சேர்க்கை X

54. I. Charge Sheet for major penalties ——————— Appendix VIII

II. Show cause notice for minor penalties ——————— Appendix VII

I. பெருந்தண்டனைகளுக்கான குற்ற குறிப்பாணை ——————— பிற்சேர்க்கை VIII

II. சிறு தண்டனைகளுக்கான காரணம் கேட்கும் குறிப்பாணை ——————— பிற்சேர்க்கை VII

(A) I and II are correct
I மற்றும் II சரி

(B) I and II are not correct
I மட்டும் II தவறு

(C) I only correct
I மட்டும் சரி

(D) II only correct
II மட்டும் சரி

55. Period of limitation for appeal in the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules is
தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின்படி மேல்முறையீடு செய்வதற்கான காலவரையறை

(A) one month
ஒரு மாதம்

(B) 15 days
15 நாட்கள்

(C) two months
இரண்டு மாதங்கள்

(D) three months
மூன்று மாதங்கள்

56. All appeals and review petitions pertaining to disciplinary cases should be disposed of within
மேல்முறையீடு மற்றும் மறு ஆய்வு குறித்த மனுக்கள் தீர்வு செய்யப்பட வேண்டிய கால அளவு

(A) two years
இரண்டு வருடங்கள்

(B) three months
மூன்று மாதங்கள்

(C) one year
ஒரு வருடம்

(D) six months
ஆறு மாதங்கள்

57. An appeal may be withheld by invoking the provisions under of the Tamil Nadu Civil Service (D&A) Rules?
தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் எவ்விதியின் கீழ் மேல்முறையீட்டினை நிறுத்தி வைக்கலாம்?

(A) Rule 25
விதி 25

(B) Rule 26
விதி 26

(C) Rule 27
விதி 27

(D) Rule 19
விதி 19

58. I. The review power is vested with the Government only.
II. The Head of the Department also make review
I. அரசு மட்டுமே மறு ஆய்வு செய்யலாம்.
II. துறைத் தலைமையும் மறு ஆய்வு செய்யலாம்

(A) I and II are not correct
I மற்றும் II தவறு

(B) II only correct
II மட்டும் சரி

(C) I only correct
I மட்டும் சரி

(D) I and II are correct
I மற்றும் II சரி

59. What rule in the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules specifies that the application for revision shall be delt with in the same manner as that of appeal?
தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் மேல்முறையீடு மற்றும் சீராய்வு மனுக்கள் ஒரே மாதிரி பரிசீலிக்கப்பட வேண்டும் என்று எவ்விதியில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Rule 37
விதி 37

(B) Rule 36(1)
விதி 36(1)

(C) Rule 36(2)(c)
விதி 36(2)(c)

(D) Rule 27
விதி 27

60. I. If a Government servant dies while his appeal against the punishment imposed is pending the appeal need not be examined
II. If a Government servant dies during the disciplinary proceeding is pending the appropriate authority may issue abatement order
I. ஒரு அரசு ஊழியரின் மேல்முறையீடு நிலுவையில் இருக்கும்போது அவர் இறந்துவிட்டால் அம்மனு பரிசீலிக்கப்பட வேண்டியதில்லை.
II. அரசு ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருக்கும்போது அவர் இறக்க நேரிடின் உரிய அதிகாரி அவ்வொழுங்கு நடவடிக்கையினை இரத்து செய்யலாம்.

(A) II only correct
II மட்டும் சரி

(B) I and II are correct
I மற்றும் II சரி

(C) I and II are not correct
I மற்றும் II தவறு

(D) I only correct
I மட்டும் சரி

61. Appendix I in the standard form for order of
ஒழுங்கு நடவடிக்கையின் செயல்முறைக்கான கையேட்டில் பிற்சேர்க்கை I இல் உள்ள படிவம் எதற்காக பயன்படுத்தப்படுகின்றது?

(A) Revocation of suspension
தற்காலிக பணி நீக்க முறிவு

(B) Extension of suspension
தற்காலிக பணிநீக்கத்தை நீட்டிக்க

(C) Appointment of inquiry officer
விசாரணை அலுவலர் நியமனம்

(D) Suspension
தற்காலிக பணி நீக்கம்

62. As per the Tamil Nadu Public Service Commission Regulations 1954 'Member' means
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள், 1954இன் கீழ் உறுப்பினர் என்பது

(A) Member of the Commission which includes the Chairman
தேர்வாணைய உறுப்பினர் தலைவர் உட்பட

(B) Member of the Commission which excludes the Chairman
தேர்வாணைய உறுப்பினர் தலைவர் நீங்கலாக

(C) Member only
உறுப்பினர் மட்டும்

(D) Member of any service
ஏதாவது ஒரு பணியின் உறுப்பினர்

63. Monthly Salary and allowances are paid to the Chairman and Members of the Commissioner in accordance with which provisions of the Tamil Nadu Public Service Commission Regulations 1954?

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள் 1954 இன் கீழ் தேர்வாணைய தலைவர் மற்றும் உறுப்பினர்களின் ஊதியம் மற்றும் படிகள் தேர்வாணைய ஒழுங்கு முறைகளில் ———————— இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

(A) Regulation 3
ஒழுங்குமுறை 3

(B) Regulation 5
ஒழுங்குமுறை 5

(C) Regulation 4
ஒழுங்குமுறை 4

(D) Regulation 2
ஒழுங்குமுறை 2

64. In cases where the Government on admitting an appeal, the Commission shall be Consulted as per ———— of the TNPSC Regulations 1954.
அரசு மேல்முறையீட்டினை அனுமதிக்கும் நிகழ்வுகளில் தேர்வாணைய ஒழுங்கு முறைகளில் TNPSC Regulations 1954 -ன் படி ஒழுங்கு முறை ————இன்படி ஆணையத்தின் கருத்து பெறப்பட வேண்டும்.

(A) Regulation 18(1) (b)
ஒழுங்குமுறை 18(1) (b)

(B) Regulation 18(1) (a)
ஒழுங்குமுறை 18(1) (a)

(C) Regulation 16
ஒழுங்குமுறை 16

(D) Regulation 17
ஒழுங்குமுறை 17

65. If the Government propose an original order imposing removal from service the Commission shall be consulted as per
அரசு ஊழியருக்கு பணி நீக்கம் என்ற தண்டனையை வழங்கும் நிகழ்வில் ———— இன்படி தேர்வாணையத்தின் கருத்து பெறப்பட வேண்டும்.

(A) Regulation 18(1) (b) (v)
ஒழுங்குமுறை 18(1) (b) (v)

(B) Regulation 18(1) (b) (i)
ஒழுங்குமுறை 18(1) (b) (i)

(C) Regulation 18(1) (b) (ii)
ஒழுங்குமுறை 18(1) (b) (ii)

(D) Regulation 18(1) (b) (iv)
ஒழுங்குமுறை 18(1) (b) (iv)

66. I. A punishment of reduction to lower rank the Commission shall be consulted
II. For a punishment of increment cut with cumulative effect the Commission need not be consulted
I. பணியிறக்கம் என்ற தண்டனை வழங்கும் போது தேர்வாணையத்தின் கருத்து பெறப்பட வேண்டும்.
II. திரண்ட பயனுடன் ஊதிய உயர்வு நிறுத்தம் என்ற தண்டனை வழங்கும் போது தேர்வாணையத்தின் கருத்து பெறப்பட வேண்டியதில்லை.

(A) I and II are correct
I மற்றும் II சரி

(B) I only correct
I மட்டும் சரி

(C) II only correct
II மட்டும் சரி

(D) I and II are not correct
I மற்றும் II தவறு

67. In cases of retired Government servant who did not agree with the punishment under the Tamil Nadu Pension Rules, 1978, consultation of Commission is necessary in accordance with
ஒய்வு பெற்ற அரசு ஊழியர் தமிழ்நாடு ஓய்வூதிய விதியில், 1978இன் கீழ் உத்தேச தண்டனையை ஏற்க மறுக்கும் போது எந்த ஒழுங்குமுறையின்படி தேர்வாணையத்தின் கருத்து பெறப்பட வேண்டும்.

(A) Regulation 18(1) (a)
ஒழுங்குமுறை 18(1) (a)

(B) Regulation 18(1) (b)
ஒழுங்குமுறை 18(1) (b)

(C) Regulation 18 (1) (c)
ஒழுங்குமுறை 18(1) (c)

(D) Regulation 18(1) (d)
ஒழுங்குமுறை 18(1) (d)

68. I. If the State Government propose to reject a memorial petition, the Commission need not be consulted

II. For entertaining the said petition the Commission need not be consulted

I. ஒழுங்கு நடவடிக்கை பொருண்மை குறித்த மனுவினை அரசு தள்ளுபடி செய்யும் நேர்வுகளில் தேர்வாணையத்தின் கருத்து பெறப்படவேண்டியதில்லை.

II. மேற்கண்ட மனுவினை அனுமதிக்கும் நேர்வுகளில் தேர்வாணையத்தின் கருத்து பெறப்பட வேண்டியதில்லை.

(A) I and II are not correct
I மற்றும் II தவறு

(B) I only correct
I மட்டும் சரி

(C) II only correct
II மட்டும் சரி

(D) I and II are correct
I மற்றும் II சரி

69. Posts in respect of which the Commission shall be consulted in the matter of promotion are listed in ———— of the Tamil Nadu Public Service Commission Regulations 1954.
பதவி உயர்வின் போது தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்பட வேண்டிய பணியிடங்களின் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள் 1954 -ன் பட்டியல் தேர்வாணைய ஒழுங்கு முறைகளில் எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Annexure II
பிற்சேர்க்கை II

(B) Annexure I-B
பிற்சேர்க்கை I-B

(C) Annexure III
பிற்சேர்க்கை III

(D) Annexure IV
பிற்சேர்க்கை IV

70. I. Annexure -II referred to regulation 8 speaks about condition of service of persons holding the posts in the commission

II. The said Annexure-II includes the Chairman and the Members

I. தேர்வாணையத்தின் பதவிகளுக்கான பணி குறித்த வரையறைகள் ஒழுங்குமுறை 8-இன் பிற்சேர்க்கை-II-இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

II. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பிற்சேர்க்கை-II தேர்வாணைய தலைவர் மற்றும் உறுப்பினர்களை உள்ளடக்கியது.

(A) I only correct
I மட்டும் சரி

(B) I and II are not correct
I மற்றும் II தவறு

(C) II only correct
II மட்டும் சரி

(D) I and II are correct
I மற்றும் II சரி

71. All the officers except the Chairman and members of the Commission shall be under the purview of DV&AC mentioned in
தேர்வாணைய தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தவிர்த்த ஏனைய அனைத்து அலுவலர்களும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்கத்தின் வரம்பிற்கு உட்பட்டவர்கள் ———— இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

(A) Regulation 13
ஒழுங்குமுறை 13

(B) Regulation 16
ஒழுங்குமுறை 16

(C) Rule 7A in Annexure - II
பிற்சேர்க்கை II-ல் விதி 7A

(D) Rule 1A in Annexure II
பிற்சேர்க்கை II-ல் விதி 1A

72. Who is competent to make appointment in the post of Section officer in TNPSC?
த.நா.அ.ப. தேர்வாணையத்தின் பிரிவு அலுவலர் பணிக்கு பணிநியமான அதிகாரி யார்?

(A) The Secretary
செயலாளர்

(B) The chairman
தலைவர்

(C) The member of the Commission
தேர்வாணைய உறுப்பினர்

(D) Chairman and member
தலைவர் மற்றும் உறுப்பினர்

73. Who empowers the power of the Head of Department regarding review of any order made under the Tamil Nadu Civil Services (Discipline and Appeal ) Rules?
தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணையினை துறைத் தலைவர் நிலையில் மறு ஆய்வு செய்யும் அதிகாரம் யாருக்கு உரியது?

(A) The Chairman
தலைவர்

(B) Secretary
செயலாளர்

(C) Chairman and the Member
தலைவர் மற்றும் உறுப்பினர்

(D) Chairman and the Secretary
தலைவர் மற்றும் செயலாளர்

74. Who is the Appellate authority in which the original order passed by the Under Secretary in the Commission?
தேர்வாணைய சார்புச் செயலாளர் பிறப்பித்த ஆணைக்கு மேல்முறையீட்டு அலுவலர் யார்?

(A) Chairman
தலைவர்

(B) Members of the Commission
தேர்வாணையத்தின் உறுப்பினர்கள்

(C) Secretary
செயலாளர்

(D) Secretary /Controller of Examinations
செயலாளர் / தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்

75. Every member including the Chairman shall submit to the Government a return of the assets and liabilities every year specified in ———— of the Tamil Nadu Public Service Commission, 1954.
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள் 1954, தேர்வாணைய தலைவர் உட்பட அனைத்து உறுப்பினர்களும் அரசுக்கு ஆண்டுதோறும் தங்களின் சொத்து விவரப் பட்டியலை தாக்கல் செய்ய வேண்டும் என்று தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Regulation 7-BB
ஒழுங்குமுறை 7-BB

(B) Regulation 7-B
ஒழுங்குமுறை 7-B

(C) Regulation 7-C
ஒழுங்குமுறை 7-C

(D) Regulation7-A
ஒழுங்குமுறை 7-A

76. If the Government propose to pass an original order imposing recovery from the pay of the whole or part on any pecuniary loss caused to the Government consultation of the Commission is necessary as per regulation
அரசிற்கு ஏற்பட்ட இழப்பிற்காக அரசு ஊழியரின் ஊதியம் முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியையோ பிடித்தம் செய்து ஆணை வெளியிட உத்தேசித்துள்ள நேர்வுகளில் எந்த ஒழுங்கு முறையின் கீழ் தேர்வாணையத்தின் கருத்து பெறப்பட வேண்டும்?

(A) 18(1)(b)(i)

(B) 18(1)(b)(ii)

(C) 18(1)(b)(iv)

(D) 18(1)(b)(iii)

77. Who is appointing Authority for the post of Assistant to the Commission?
தேர்வாணைய உதவியாளர் பணியிடத்திற்கான நியமன அலுவலர் யார்?

(A) Chairman
தலைவர்

(B) Secretary
செயலாளர்

(C) Joint Secretary
இணைச் செயலாளர்

(D) Governor
ஆளுநர்

78. What is the crucial date for promotion to the post of Under Secretary to the Commission?
தேர்வாணைய சார்புச் செயலாளர் பதவி உயர்விற்கான அறுதியிட்ட நாள் எது?

(A) 1st September of every year
ஆண்டுதோறும் செப்டம்பர் முதல் நாள்

(B) 1st July of every year
ஆண்டுதோறும் ஜூலை முதல் நாள்

(C) 1st August of every year
ஆண்டுதோறும் ஆகஸ்ட் முதல் நாள்

(D) 16th August of every year
ஆண்டுதோறும் ஆகஸ்ட் பதினாறாம் நாள்

79. Under which article of Constitution of India, the Tamil Nadu Public Service Commission conduct examination to the Public Services?
அரசியலமைப்புச் சட்டத்தின் எந்த சட்டக் கூற்றின்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் பொதுப் பணிக்காக தேர்வுகளை நடத்துகின்றது?

(A) Article 309
சட்டக்கூறு 309

(B) Article 320
சட்டக்கூறு 320

(C) Article 310
சட்டக்கூறு 310

(D) Article 323
சட்டக்கூறு 323

80. The Chairman of the TNPSC was appointed by the
தேர்வாணையத் தலைவர் யாரால் நியமிக்கப்படுகிறார்?

(A) The Chief Minister of Tamil Nadu
முதலமைச்சர்

(B) The council of Ministers
அமைச்சரவை

(C) The Governor
ஆளுநர்

(D) The President of India
குடியரசுத் தலைவர்

81. Rule 4 of the Rules of Procedure speaks
தேர்வாணைய விதிகளில், விதி 4 குறிப்பிடுவது?

(A) Definitions
வரையறைகள்

(B) Matters placed before the Commission
தேர்வாணையத்தின் முன் வைக்கப்படும் விஷயங்கள்

(C) Matters to be decided by the Commission
தேர்வாணையத்தால் முடிவெடுக்கப்படும் விஷயங்கள்

(D) Matters to be decided by the Chairman
தேர்வாணைய தலைவரால் முடிவெடுக்கப்படும் விஷயங்கள்

82. Selection of examiners for confidential work to be decided by
மந்தண வேலைகளுக்கு தேர்வு செய்யப்படும் தேர்வாளர்களை முடிவு செய்வது

(A) The Chairman
தலைவர்

(B) The Secretary
செயலாளர்

(C) Members of the Commission
தேர்வாணைய உறுப்பினர்கள்

(D) The Controller of Examinations
தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்

83. I. The Chairman may depute any member to perform any particular work of the Commission

II. In the above situation the files need not be circulated to him for his opinion

I. தேர்வாணையத்தின் எந்த ஒரு பணியினையும் ஏதேனும் ஒரு உறுப்பினருக்கு தேர்வாணைய தலைவர் நிர்ணயிக்கலாம்.

II. மேற்கண்ட சூழலில் அவ்வுறுப்பினரின் கருத்தறிய கோப்புகளை சுற்றனுப்ப தேவையில்லை.

(A) I and II are correct
I மற்றும் II சரி

(B) I correct
I சரி

(C) II correct
II சரி

(D) I and II are not correct
I மற்றும் II தவறு

84. Matters not specifically allotted to a Committee or a Member shall be decided by
ஏதேனும் ஒரு குழு அல்லது உறுப்பினருக்கு நிர்ணயம் செய்யப்படாத பொருண்மையை முடிவு செய்வது

(A) The Secretary
செயலாளர்

(B) Members of the Commission
தேர்வாணைய உறுப்பினர்கள்

(C) The Joint Secretary
இணைச் செயலாளர்

(D) The Chairman
தலைவர்

85. Under which rule recruitment procedure are detailed?
பணியமர்த்தம் குறித்து எவ்விதியில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Rule 6
விதி 6

(B) Rule 7
விதி 7

(C) Rule 5
விதி 5

(D) Rule 3
விதி 3

86. I. The marks obtained in the preliminary examination shall be counted for the purpose of short listing of candidates

II. It is also counted for the final list

I. முதனிலை தேர்வில் பெறும் மதிப்பெண்கள் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்காக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

II. அம்மதிப்பெண்கள் இறுதி தேர்விற்கும் கணக்கில் கொள்ளப்படும்.

(A) II only correct
II மட்டும் சரி

(B) I and II are correct
I மற்றும் II சரி

(C) I and II are not correct
I மற்றும் II தவறு

(D) I only correct
I மட்டும் சரி

87. The procedure for deletion of names of candidates from the approved list are laid down in
ஒப்புதல் அளிக்கப்பட்ட பட்டியலில் இருந்து விண்ணப்பதாரர்களின் பெயரினை நீக்குவதற்கான செயல்முறை குறித்து எவ்விதியில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Rule 8
விதி 8

(B) Rule 6
விதி 6

(C) Rule 5
விதி 5

(D) Rule 7
விதி 7

88. I. For Departmental Promotion Committee the Chairman shall preside over the meeting

II. The Chairman can nominate a member to act as Chairman for Departmental Promotion Committee meeting

I. துறை பதவி உயர்வு குழு கூட்டத்தில் தேர்வாணைய தலைவர் தலைமை தாங்குவார்.

II. தேர்வாணைய தலைவர் முன்மொழியும் உறுப்பினர் துறை பதவி உயர்வு கூட்டத்திற்கு தலைமை தாங்குவார்.

(A) I correct
I சரி

(B) II correct
II சரி

(C) I and II are correct
I மற்றும் II சரி

(D) I and II are not correct
I மற்றும் II தவறு

89. Matters relating to recruitments to be made otherwise than the by direct recruitment or recruitment by transfer are detailed in
நேரடி நியமனம் அல்லது மாறுதல் மூலம் பணி நியமனம் தவிர இதர பணியமர்த்தம் குறித்த பொருண்மை எவ்விதியில் விளக்கப்படுகிறது?

(A) Rule 10
விதி 10

(B) Rule 11
விதி 11

(C) Rule 7
விதி 7

(D) Rule 8
விதி 8

90. Rule 12 speaks about
விதி 12-இல் குறிப்பிடப்படுவது

(A) Recruitment by transfer
மாறுதல் மூலம் பணியமர்த்தம்

(B) Deletion of names from the list
பட்டியலில் இருந்து பெயர்களை நீக்குதல்

(C) Competitive Examinations
போட்டித் தேர்வுகள்

(D) Departmental Examinations
துறைத் தேர்வுகள்

91. I. The Chairman may convene the meetings of the Commission on his Own.
II. Also on the suggestion of any one of the Member of the Commission.
I. தேர்வாணைய தலைவர் தன் விருப்பப்படி கூட்டங்களை நடத்தலாம்.
II. தேர்வாணைய உறுப்பினரின் கருத்திற்கிணங்க கூட்டங்களை நடத்தலாம்.

(A) I and II are correct
I மற்றும் II சரி

(B) I only
I மட்டும்

(C) II only
II மட்டும்

(D) I and II are not correct
I மற்றும் II தவறு

92. All decisions of the Commission shall be recorded by
தேர்வாணையத்தின் அனைத்து முடிவுகளையும் பதிவு செய்வது

(A) The Chairman
தலைவர்

(B) The Secretary
செயலாளர்

(C) One of the member
ஏதேனும் ஓர் உறுப்பினர்

(D) Controller of Examination
தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்

93. I. The minutes of the meeting shall be circulated to all Members of the Commission
II. Minutes of the meeting preserved as a permanent record
I. கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பு தேர்வாணையத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கு சுற்றனுப்பப்படும்.
II. கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பு நிலையான ஆவணமாக பதிவு செய்யப்படும்.

(A) I only correct
I மட்டும் சரி

(B) II only correct
II மட்டும் சரி

(C) I and II are correct
I மற்றும் II சரி

(D) I and II are not correct
I மற்றும் II தவறு

94. I. The advice of the Common in disciplinary case shall be communicated to the officer concerned along with the final order

II. The above position is decided by the Government

I. ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில், தேர்வாணையத்தின் கருத்து சம்பந்தப்பட்ட அலுவலருக்கு இறுதியாணையுடன் அனுப்பப்பட வேண்டும்.

II. மேற்கண்ட நிலைப்பாடு அரசால் முடிவு செய்யப்படும்.

(A) I and II are not correct
I மற்றும் II தவறு

(B) I only correct
I மட்டும் சரி

(C) I and II are correct
I மற்றும் II சரி

(D) II only correct
II மட்டும் சரி

95. Rules 17 speaks about
விதி 17 -இல் கூறப்பட்டுள்ளது

(A) Duties of the Chairman
தலைவரின் கடமைகள்

(B) Duties of the Members
உறுப்பினர்களின் கடமைகள்

(C) Duties of the Secretary
செயலாளரின் கடமைகள்

(D) Duties of the Departmental Promotion Committee
துறை பதவி உயர்வு குழுவின் கடமைகள்

96. The commission shall present a report of their proceedings to the State Government by
தேர்வாணையத்தின் செயல்முறைகளின் அறிக்கை அரசுக்கு அனுப்பப்படுவது

(A) 15th August of every year
ஆண்டுதோறும் ஆகஸ்ட் 15

(B) 30th July of every year
ஆண்டுதோறும் ஜூலை 30

(C) 15th July of every year
ஆண்டுதோறும் ஜூலை 15

(D) 30th May of every year
ஆண்டுதோறும் மே 30

97. Rule 22 speaks
விதி 22-இல் குறிப்பிடப்படுவது

(A) Presentation of Annual Report
ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்

(B) Special Procedure
சிறப்பு செயல்முறை

(C) Calling for the records from the Government
அரசிடமிருந்து ஆவணங்களை கோருதல்

(D) Matters not regulated
ஒழுங்குமுறை செய்யப்படாத பொருண்மை

98. What is the percentage of unexpected contingencies while computing the estimate of vacancy when the total vacancies arrived is 25?
காலிபணியிட மதிப்பீடு கணக்கிடும்போது அம்மதிப்பீடு 25 எனில் அதற்கான எதிர்பாராத நிகழ்வுகளுக்காக எத்தனை சதவீத பணியிடங்கள் ஒதுக்கப்பட வேண்டும்?

(A) 30
(B) 10
(C) 15
(D) 20

99. Choose the time limit for Inquiry officer to submit the Inquiry report
விசாரணை அலுவலர் தன்னுடைய விசாரணை அறிக்கையை சமர்ப்பிப்பதற்குரிய கால அளவு

(A) 60 days
60 நாட்கள்

(B) 90 days
90 நாட்கள்

(C) 30 days
30 நாட்கள்

(D) 45 days
45 நாட்கள்

100. The Govt. may transfer a case from one Tribunal to another by invoking the rule________ of the Tamil Nadu Civil Service (Disciplinary Proceeding Tribunal) Rules, 1955.
தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம்) விதிகள் 1955 இல் எவ்விதியின் வாயிலாக அரசு ஒரு வழக்கினை ஒரு தீர்ப்பாயத்திலிருந்து மற்றொரு தீர்ப்பாயத்திற்கு மாற்றலாம்?

(A) 8A
(B) 8B
(C) 8
(D) 7

---